## புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம் - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து பணியகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையில் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகள் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பணியகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் பணியகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பணியகத்தின் கட்டுப்பாட்டு பணியகத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

## 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இற்கு முரணாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் இலாபத்திற்குச் செம்மையாக்கப்பட வேண்டிய ரூபா 3,003,451 தொகையான பிற்போட்ட வருமானம் மற்றும் ரூபா 2,221,194,662 தொகையான அரசிறைகளுக்குரிய செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காட்டப்பட வேண்டியிருந்த ரூபா 1,958,859 பணிக்கொடை கொடுப்பனவு காசுப்பாய்ச்சலுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது. முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட வேண்டிய இடர் நிதியத்திற்கான கொடுப்பனவு ரூபா 5,514,806 மற்றும் அந்த நிதியத்திலிருந்து மீளச் செலுத்துதல் ரூபா 3,572,000 தொகைக்காக செம்மையாக்கப்படாது அப் பெறுமதிகளுக்கிடையிலான வித்தியாசமான ரூபா 1,942,806 திறைசேரிக்கு அனுப்பி வைத்தல்கள் ரூபா 1,500,000,000 மற்றும் அரசிறை ரூபா 2,221,194,662 என்பன நிதிச்செயற்பாடுகளாகக் காட்டப்பட்டிருந்தன. மேலும், பண முதலீடு இடம் பெறாத ரூபா 148,899,366 தொகையான ஆதனம், பொறி உபகரணங்கள் என்பவற்றுக்கான செம்மையாக்கல்லாக முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இந்த பிழையான செம்மையாக்கலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றானது ஏற்றுக்கொள்ளக் கூடிய மட்டத்தில் இருக்கவில்லை. | துறைமுக நகர் செயற்திட்டத்தின் கீழ் அரசிறையாகக் குறிப்பிடப்பட்ட பணமானது பணரீதியான கொடுக்கல்வாங்கலாக இல்லாததன் காரணமாக காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு தொடர்புபடுத்தப்படவில்லை. பிற்போட்ட வருமானங்களைச் செம்மையாக்குதல். முன்னர் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் செம்மையாக்கப்பட்டது. பணிக்கொடைக்கொடுப்பனவின் கீழ் காட்டப்பட்ட ரூபா 1,958,859 இல் உள்ளடக்கப்பட்டு செலுத்தப்பட்ட பணிக்கொடை பணம் நிதி செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் எதிர்காலத்தில் அதனை செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் குறிப்பிடப்படும்.<br><br>பொதுத் திறைசேரிக்கு அரசிறைப் பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 1,700,000,000 பணத்தில் 2019 ஆம் ஆண்டிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 200,000,000 பணமும் இருந்ததனால் ரூபா 1,500,000,000 நிதிச் செயற்பாடுகளின் கீழ் செம்மையாக்கப்பட்டுள்ளது. அப்பணம் மற்றும் ரூபா 148,899,366 தொகை செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் எதிர்வரும் ஆண்டுகளின் போது செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ரூபா 5,514,806 பணம் முதலீடுகளின்றி ஊழியர்களுக்கு வழங்க வேண்டியிருந்த படிகளிலிருந்து | நியமத்திலுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நலன்புரி நடவடிக்கைகளுக்காக மாற்றப்பட்ட பணமாகும். எனவே மீளச் செலுத்தப்பட்ட ரூபா 3,572,000 பணமும் ரூபா 5,514,806 பணமும் நிதிச் செயற்பாடுகளின் கீழ் செம்மையாக்கப்பட்டன. | |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை பணியகத்திற்கு எதிராக வெளித்தரப்பினர்களால் 28 வழக்குகளும் வெளித்தரப்பினர்களுக்கு எதிராக பணியகத்தினால் 18 வழக்குகளும் தொடுக்கப்பட்டிருந்தும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் உரிய நிகழத்தக்க பொறுப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வெளித்தரப்பினர்களால் பணியகத்திற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளில் நிதிரீதியான தாக்கம் ஏற்படும் வழக்குகள் மாத்திரம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன. | நியமத்திலுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| பணியகம் அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்திருந்தும் இறைவரி வருமானத்தை காசு அடிப்படையில் இனங்கண்டு ரூபா 4,336,254,836 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 10 இன் 34(ஆ) மற்றும் 37 ஆம் பந்திகளின் பிரகாரம் அட்டுறு வருமானத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் நியமத்தின் 39(அ) பந்தியின் பிரகாரம் இறைவரி வருமானத்தை இணங்காண்பதற்கு பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இறைவரி வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. வருமானங்களும் செலவுகளும் அட்டுறு அடிப்படையிலேயே கணக்கீடு செய்யப்படுகின்றன. எவ்வாறாயினும், இறைவரி வருமானத்தை இனங்காணும் நடைமுறையில் குறைபாடுகள் உள்ளதனால் பெற வேண்டிய இறைவரிப் பணத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. | புணியகத்தின் வருமானத்தை இனங்காண்பது சம்பந்தமாக மற்றும் வெளிப்படுத்தல் சம்பந்தமாக கணக்கீட்டு நியமங்களில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான ஒரு செலவாகக் காட்ட வேண்டிய திறைசேரிக்கு மேற்கொள்ளப்பட்ட இறைவரிக் கொடுப்பனவுகள் ரூபா 200,000,000 தொகையானது முகாமைத்துவத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் முற்கொடுப்பனவாகக் காட்டப்படடிருந்தது. இதன் காரணமாக ஆண்டிற்கான இலாபம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபைத் தீர்மானம் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் குறிப்புக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் பொதுத்திறைசேரிக்குச் செலுத்தப்பட்ட பணத்தில் ரூபா 200,000,000 பணம் 2019 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்கான செலவுகள் அந்த ஆண்டிற்கான செலவாக இனங்காணப்படுதல் வேண்டும். |
| (ஆ) | பல்லேகல சுனாமி தொடர்பாடல் நிலையத்தை பராமரிப்பதற்காக வெளிநாட்டு பல்கலைக்கழத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு செலவு செய்ததன் பின்னர் மிகுதியாக உள்ள ரூபா 10,703,148 பணத்தை மீளச் செலுத்துவது தொடர்பாக உறுதியான ஒரு பொறுப்பு இல்லாது நடைமுறைப் பொறுப்பாகக் காட்டப்பட்டிருந்தது. | சுனாமி உபகரணங்களில் அவசர செலவுகளை மேற்கொள்வதற்கான முற்பணமாக ரூபா 10,703,148 கிடைத்திருந்தது. முன்னைய ஆண்டுகளிலிருந்து அது நடைமுறைப்பாகக் காட்டப்பட்டிருந்தது. | இது சம்பந்தமான சரியான கணக்கீட்டுக் கொள்கையைத் தெரிவு செய்து அதற்கிணங்க கணக்கீடு செய்வதற்கும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பணியகத்திற்குச் சொந்தமில்லாத நலன்புரி நிதியம் ஒன்றில் காணப்பட்ட ரூபா 30,052,605 மீதியை ஒரு பொறுப்பாகவும் அது தொடர்பான நிலையான வைப்பு மீதியான ரூபா 31,731,928 தொகையினை ஒரு சொத்தாகவும் நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்ததுடன் நிலையான வைப்பு வட்டியாகிய ரூபா 1,751,819 பணியகத்தின் ஒரு வருமானமாகக் கொண்டுவரப்பட்டிருந்தது. | இது ஒரு நிதியம் அல்ல எனவும் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணம் மாத்திரம் எனவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. | திறைசேரி அங்கீகரித்த ஒரு நிதியமாக பேணப்படுவதாக இருந்தால் மாத்திரம் பணியகத்தின் கணக்குகளில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.5 ஒருங்கிணைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவைகள் கம்பனியின் மொத்த பங்கு மூலதனத்தில் 66 சதவீத உரிமை பணியகத்திற்கு இருந்தும் அக் கம்பனியின் நிதிக்கூற்றுக்களை பணியகத்தின் நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கினைத்து ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவைகள் கம்பனியின் நிதிக்கூற்றுக்களை பணியகத்தின் நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கிணைக்க முடியாத விடயங்கள் இறுதிக் கண்ககறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. | 66 சதவீத உரிமை பணியகததிற்கு உள்ளதனால் உருவாகியுள்ள சட்டரீதியான விடயங்களை உடனடியாகத் தீர்த்து வைத்து ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை.

| விடயம் | பணம் | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| வருமான வரி | 32,617,607 | வருமானவரிக் கணிப்பின் போது வரி செலவாக கழிக்கப்பட்ட நிறுத்தி வைத்தல் வரிக் கொடுப்பனவுகளுக்குரிய உறுதிப்படுத்தல்கள். | நிறுத்தி வைத்தல் வரியை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து ஆவணங்களையும் பணியகம் கொடுக்கல் வாங்கல் செய்யும் வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொண்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுத்தி வைத்தல் வரிகளுக்குரிய உறுதிப்படுத்துதல் சான்றுகளை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் பெற்றோலியப் பொருட்கள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) 26(1) மற்றும் | 1. அரசாங்கத்திற்காக | சுரங்கங்கள் மற்றும் | இறைவரிப் பணத்தை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 44 (ஆ) பிரிவு | | பணியகம் அறவிட்ட இறைவரிகளை திறைசேரிக்கு அனுப்பி வைக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட ரூபா 4,326,254,835 தொகையான இறைவரிகளிலிருந்து ரூபா 605,060,173 திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. கடந்த 04 ஆண்டுகள் தொடர்பாக இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்ட இறைவரிகளின் மொத்தம் ரூபா 1,530,541,421 ஆகும். | பெற்றோலியப் பொருட்கள் அதிகாரச் சட்டத்திற்கு இணங்க பணியகம் செயற்படுகின்றது. அதன் போது பணியகத்திற்கு நிதியத்தை பேணக் கூடியதாக இருந்ததுடன் பணியகத்தின் செலவுகளை அதன் மூலம் தீர்த்து வைப்பதற்கு அதிகாரம் உள்ளது. எவ்வாறாயினும், பணியகம் ஒவ்வொரு ஆண்டும் திறைசேரிக்கு மிகைப் பணத்தை அனுப்பிவைத்தல் இடம் பெறுகின்றது. | திறைசேரிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நிதியத்தைப் பேணுவதற்காக பொதுத்திறைசேரியின் நிர்ணயிக்கப்பட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| | | 2. | அங்குனகுலபெலஸ்ஸ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள 4 உத்தரவுப் பத்திரம் பெற்றவர்களால் அங்கீகரித்த எல்லையை மிகைத்து அகழ்ந்து எடுக்கப்பட்ட 31,772 கியூப் கருங்கற்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,906,320 இறைவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாகத் தேடிப்பார்த்து உரிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய இறைவரியை அறவீடு செய்யும் நடவடிக்கை முறையான நடைமுறைக்கு இணங்கவும் செயற்திறனாகவும் மேற்கொள்ள வேண்டும். |
| (ii) | 28(4) ஆம் பிரிவு | | கருங்கல் உற்பத்திகளை போக்குவரத்துச் செய்வதற்காக உத்தரவுப் பத்திரங்களை வழங்கும் நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருங்கல் உற்பத்திகளை போக்குவரத்துச் செய்வதற்காக உத்தரவுப் பத்திரங்களை வழங்கும் நடைமுறை தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | கருங்கல் போக்குவரத்து சட்டத்துக்கு முரணாக இடம் பெறுவதைத் தவிர்ப்பதற்காக உத்தரவுப் பத்திரங்களை வழங்கும் நடைமுறை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 52(2) ஆம் பிரிவு மற்றும் 1997 சனவரி 10 ஆந் திகதிய 958 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட 21(அ) ஆம் சுரங்கங்கள் மற்றும் அகழ்தல் பணிப்புரை | அகழ்தலின் பின்னர் 3 மாதங்களிலிருந்து 5 மாதங்கள் வரையான காலத்துள் நிலத்தை புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத கைத்தொழில் அகழ்தல் உத்தரவுப் பத்திரங்கள் 874 நபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 101,955,175 தொகையான வங்கிப் பிணைகளுக்கு பணத்தைப் பெற்று செலுத்த வேண்டிய மீதியாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | தற்பொழுது வரை புனரமைப்புச் செய்யாத குழிகளுக்காக பணியகத்திற்கு வழங்கப்பட்டுள்ள வங்கிப் பிணைகளை கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கபட்டுள்ளதுடன் அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கான நடைமுறைகள் தயாரிக்கப்பட்டுவருகின்றது. | ஒழுங்கு விதிகளின் பிரகாரம் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 1997 சனவரி 10 ஆந் திகதிய 958 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட 33(4) ஆம் சுரங்கங்கள் மற்றும் அகழ்தல்கள் பணிப்புரை | சுரங்க உற்பத்திப் பொருட்களின் நிர்ணயிக்கப்பட்ட சந்தைப் பெறுமதி வழங்க கூடிய கழிவுகள், மற்றும் அரசிறை கொடுப்பனவுகள் நடைமுறைக்காக செயலாளருக்கு சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்டு காலரீதியாக திருத்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய திருத்தங்களைச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | அதிகாரச் சட்டத்திலுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் II ஆம் பகுதியின் 6.2(அ) பந்தி | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ½ மாத சம்பளத்தின் அடிப்படையில் பணிக்கொடை கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் முழு மாத சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டதன் காரணமாக 18 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 7,296,846 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 81,445,551 மேலதிகமாக பணிக்கொடைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அரசாங்க தொழில் முறச்சிகள் பணிப்பாளர் நாயகம் | பணிக்கொடை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மேலதிக கொடுப்பனவு செய்யப்படவில்லை. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் அரசாங்க தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரையின் பிரகாரம் பணிக்கொடை மிகைக்கொடுப்பனவை அறவீடு செய்வதற்கும் பணிக்கொடையை கொடுப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தெரியப்படுத்தியுள்ளவாறு மேலதிகமாகச் செலுதப்பட்ட ரூபா 6,317,415 தொகையதன பணிக்கொடையை மீள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>------------------------------ | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(2) | திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது ரூபா 35,000 இலிருந்து ரூபா 165000 வரையான ரூபா 1,035,000 மொத்த தொகையான 15 சில்லறைக்காசு கட்டுநிதியும் ரூபா 40,000 இலிருந்து ரூபா 105,000 வரையான ரூபா 890,000 மொத்த தொகையான 15 எரிபொருள் முற்பணங்கள் பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | கட்டுநிதி எல்லைகளுக்காக திறைசேரி அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிராகரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 371 (5) | 1 மீளாய்வாண்டின் இறுதியில் தீர்த்து வைக்கப்படாத ரூபா 10,271,083 மொத்த தொகையான உப கட்டுநிதி மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 9,070,105 தொகை வணிக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளாகவும் ரூபா 1,200,978 தொகை காசு மற்றும் காசுக்குச் சமமான மீதிகளாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உப கட்டுநிதிகளை ஆண்டின் இறுதியளவில் முழுமையாகத் தீர்த்துவைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஆண்டின் இறுதியில் அனைத்து உப கட்டுநிதி மீதிகளையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | | 2 பணியகத்தின் முன்னாள் தலைவருக்கு 2014 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 1,500,000 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரை | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | ஆண்டின் இறுதியில் அனைத்து உப கட்டுநிதிகளையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தீர்த்துவைக்கப்பட்டிருக்காததுடன் உரிய முற்பணத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடு நிறைவேற்றப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| | (iii) | நிதிப்பிரமாணம் 760 மற்றும் 757(2) | பொருள் மெய்மையாய்வின் மூலம் துளையிடும் உபகரணங்களின் 88 வகைக்குரிய 864 அலகுகள் பற்றாக்குறையாக இனங்காணப்பட்டிருந்ததுடன் உபகரணங்களை அகற்ற வேண்டுமென உரிய உபகரணங்களை பயன்படுத்துகின்ற உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய மீளாய்வுச் சபை சிபார்சு செய்திருந்தது. இப் பற்றாக்குறை சம்பந்தமாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | பொருட்கள் மீளாய்வு நடவடிக்கையானது சுதந்திரமான மீளாய்வுச் சபையின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் பற்றாக்குறைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | | | | |
| | (i) | 8.3.3. ஆம் பந்தி | செலுத்த வேண்டிய உச்ச அளவு ஊக்குவிப்பு / மிகையூதிய படியானது 2 மாத மொத்த சம்பளமாக இருந்தபோதிலும் அதற்கு முரணாக 9.6 மாதங்களின் சம்பளத்திற்குச் சமமான ஊக்குவிப்பு படியானது திறைசேரியின் அங்கீகாரமின்றி ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. | பீஈடீ/12 இல் காட்டப்பட்டுள்ளதானது ஊக்குவிப்பு படி தொடர்பானது அன்றி மிகையூதியம் தொடர்பானதாகும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஊக்குவிப்பு படிகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 6.5.3 ஆம் பந்தி | 2015 இலிருந்து 2017 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கை 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கை தற்பொழுது அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (உ) | 2003 ஒக்தோபர் 28 ஆந் திகதிய பீஈடீ 17 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரமின்றி 04 வெளிநாட்டுப் பயணங்களுக்கு 19 உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தார்கள் | பணியகத்தால் உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட அங்கீகாரத்துடன் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடீ/57 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் 2018 கூட்டிணைந்த சமூக பொறுப்பு (CSR) நிகழ்ச்சித்திட்டத்திற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்படாது திருகோணமலை, கோமரன்கடவல ரன்கிரி உல்பத ரஜமஹா விகாரையின் தர்ம மண்டபத்தின் கூரையை நிர்மாணிப்பதற்காக நிதி அமைச்சின் அங்கீகாரத்தின் பேரில் ரூபா 4,500,000 பணம் வழங்கப்பட்டிருந்தது. | கூட்டிணைந்த சமூக பொறுப்பு செலவுகள் ஏனைய செலவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. நிலையப் பரிசோதனை குழு உத்தியோகத்தர்கள் சமர்ப்பித்த அறிக்கையில் செலவு செய்யப்பட்ட பணம் ரூபா 46 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்தது | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 வரிப் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 11 ஆந் திகதியிலிருந்து பணியகம் வருமான வரியைக் கணிப்பீடு செய்யும் போது 2018 சனவரியிலிருந்து கணித்தன் காரணமாக வருமான வரிச் செலவு மற்றும் வரிப் பொறுப்பு ரூபா 22,459,000 ஆல் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காட்டபட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டிற்கான வருமான | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டதானது ஆண்டிற்கான வரியைக் கணிக்கும் போது வரிக்கான அனைத்து செலவுகளும் அந்த ஆண்டிற்கு கணிப்பிட்டு கழித்துக் கொள்வதற்கு இடமளிக்கப்பட வேண்டும் என்பதாகும். எனவே வரியைக் கணிக்கும் போது வரியை அதிகரித்துக் காட்டுதல் | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வருமானவரியை கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| வரிச் செலவைக் கணிப்பீடு செய்யும் போது பிற்போடப்பட்ட வரியினைக் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான செம்மையாக்கல்களும் செய்யப்பட்டிருக்கவில்லை. | இடம்பெற்றிருக்கவில்லை.<br>பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 391,019,540 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 686,578,905 ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 295,559,365 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இறைவரி வருமானம் ரூபா 289,770,482 ஆலும் உத்தரவுப் பத்திர கட்டண வருமானம் ரூபா 93,639,019 இனாலும் குறைவடைதல் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | தலைவர் இந்தியாவிற்கு கடமை ரீதியான சுற்றுப்பயணம் செல்லும் போது விமானத்தின் சிக்கன வகுப்பிற்குப் பதிலாக வணிக வகுப்பில் பிரயாணம் செய்ததன் காரணமாக அனுமதிப்பத்திரத்திற்காக ரூபா 52,800 மேலதிகமாகச் செலவு செய்யப்பட்டிருந்தது. | தேடிப்பார்த்து பின்னர் தெரியப்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறேன். | மேலதிகமாச் செலவு செய்யப்பட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தலைவர் ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற ஒரு நாள் கடமை ரீதியான கலந்துரையாடலுக்காக பங்குபற்றியிருந்ததுடன் 07 நாட்களுக்கு இணைந்த படிகளையும் செலுத்தியதன் காரணமாக 04 நாட்களுக்கு ரூபா 375,100 மொத்ததொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | திரும்பி வருகைதந்த விமானத்தின் நேரத்தைக் கவனத்தில் கொண்டு 07 நபர்களுக்கு படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | மிகையாகச் செலுத்தியதை மீள அறவிடுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அனுராதபுரம் மிஹிந்து ஆரண்ய சேனா சபையில் ரூபா 1,851,920 செலவு செய்து புனரமைப்புச் செய்யப்பட்டு நீர் முறைமையைத் தோற்றுவிக்கும் போது ஞாபகார்த்த பெயர்ப்பலகைக்காக ரூபா 6,500 தொகையும் செலவுசெய்யப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கையில் இயற்கை கல்லிலான ஞாபகார்த்த பெயர்ப் பலகை ஒன்று மஹரகம பிரதேசத்திலிருந்து எடுத்துவரைப்பட்டு பொருத்துவதற்காக ரூபா 775,000 மேலதிகமாகச் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நீர் முறைமையை ஆரம்பித்து வைப்பதற்காக இயற்கை கல்லிலான ஞாபகார்த்த பெயர்ப்பலகையைப் பொருத்துவதற்கான செலவையும் உள்ளடக்கிய மொத்த செலவாகிய ரூபா 25 மில்லியன் பணத்திற்காக நிதி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | தேவையான செலவுகளுக்காக மாத்திரம் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலவு செய்யப்படுதல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப் பொருட்கள் அதிகாரச் சட்டத்தை நிறைவேற்றும் அதிகாரம் பணியகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அதிகாரச் சட்டத்தினை மீறுதல்களுக்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான நடமுறைகளைத் தயாரிப்பதற்கு பணியகத்திற்கு முடியாதிருந்தது. | தற்போது பணியத்தின் சட்டப் பிரிவுடன் இணைத்துக் கொள்ளப்பட்டு சுற்றிவளைப்பு பரிவு தோற்றுவிக்கப்பட்டுள்ளதுடன் சட்டத்தை மீறுதல் சம்பந்தமான சுற்றிவளைப்புக்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் 9,000 இற்கு அதிகமான சட்டத்தை மீறுதல்களுக்காக சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. | சட்டத்தை மீறுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடைமுறைகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2017 மே 22 ஆந் திகதி அமைச்சரவையினால் மேற்காண்ட அறிவித்தலின் பிரகாரம் கனிப்பொருள் வளங்கள் தொடர்பாக தேசிய கொள்கையைத் தயாரித்து அதற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பணியகம் கணக்காய்வுத் திகதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அமைச்சரவை மேற்கொண்ட அறிவித்தலின் பிரகாரம் கனிப்பொருள் வளங்கள் தொடர்பாக தேசியக் கொள்கை தயாரிக்கப்பட்டு தற்போது அமைச்சரவைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஏப்ரல் 05 ஆந் திகதிய அமைப/17/0629/704/011 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பளிங்கு கற்களுக்கு உச்ச அளவில் பெறுமதி சேர்க்கப்பட்டதன் பின்னர் ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய போதிலும் 9 மாவட்டங்களில் 29 நபர்களுக்கு வழங்கப்பட்ட அகழ்தல் உத்தரவுப் பத்திரங்களின் அடிப்படையில் அகழப்படுகின்ற பளிங்கு கற்கள் பெறுமதி சேர்க்கப்படாது எற்றுமதி செய்யப்பட்டுவருகின்றன. அவ்வாறே வெல்லவாய கொடிகம்பொக்க பிரதேசத்தில் பளிங்கு கற்களை அகழ்வதற்கு வழங்கப்பட்ட 3 உத்தரவுப் பத்திரங்களின் மூலம் அகழ்வு செய்யக்கூடிய அளவினை மிகைத்து 10,914 சீயூப்கள் அகழ்வு செய்யப்பட்டிருந்ததுடன் வன பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான நிலத்திலும் அதற்கு அண்மையிலுள்ள தனியார் காணியிலும் அகழ்வு செய்யப்பட்ட 22,094 கியூப் பளிங்கு கற்களுக்காக அறவிடப்பட வேண்டிய இறைவரிகள் உத்தரவுப் பத்திரதாரர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பெறுமதி சேர்க்கப்படாத பளிங்குகல் கனியப்பொருளை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படடிருக்கவில்லை. அகழ்தல் உத்தரவுப் பத்திரதாரரர்களால் பளிங்கு கற்கள் ஏற்றுமதி செய்யப்படாததுடன் வர்த்தக உத்தரவுப் பத்திரத்தைக் கொண்ட ஏற்றுமதியாளர்களால் இப் பணிக்கு கற்களை கொள்வனவு செய்து நிர்ணயிக்கப்பட்ட பெறுமதி சேர்த்தலின் பின்னர் கனிப்பொருள் ஏற்றுமதி உடன்படிக்கையின் பிரகாரம் ஏற்றுமதி செயய்யப்படுகின்றன. வெல்லவாய கொடிகம்பொக்க பிரதேசத்தில் பளிங்கு கற்களை அகழ்வதற்கு வழங்கபப்ட்ட உத்தரவுப் பத்திரத்தின் அடிப்படையில் அகழ்வு செய்யப்பட்ட பளிங்கு கற்கள் ஏற்றுமதி செய்கின்ற கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் சுரங்கங்கள் மற்றும் கனியப்பொருள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அவை தொடர்பான இறைவரி அறவிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. | அமைச்சரவைத் திர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | யான் ஓயா மணல் குவியலில் மணல் அகழ்தல் மேற்கொண்டு அகழ்வுசெய்வோரின் அகழ்தல் உத்தரவுப் பத்திரத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறி மேற்கொண்டிருந்த சுற்றாடல் பாதிப்புக்கள் சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. யான்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட 1,343,810 கியூப் மண்ணிற்காக ரூபா 26,876,200 தொகையும் 3397 கியூப் மண்ணுக்காக ரூபா 543,490 தொகையுமாக ரூபா 27,419,690 மொத்தத் தொகையான இறைவரி | மணலை அகற்றும் உத்தரவுப் பத்திரங்களுக்குரிய அகழ்வு செய்யும் நிபந்தனை புனரமைப்புச் செய்வதற்காக வங்கிப் பிணை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக அனுராதபுரம் மாவட்ட செயலாளரின் தலைமையில் தொடர்புபட்ட நிறுவனங்களைப் பங்குபற்றச் செய்து இந்த அகழ்வு செய்யப்பட்ட நிலத்தை புனரமைப்புச் செய்வது தொடர்பாக எடுக்கப்படவேண்டிய நடைமுறைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. | உத்தரவுப்பத்திர நிபந்தனைகளை மீறியுள்ள உத்தரவுப்பத்திர தாரர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதற்கும் நிலுவையான இறைவரிகளை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | |
|---|---|
| உரிய ஒப்பந்த கம்பனியிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | யான்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற கல், மணல் என்பவற்றிற்காக தற்பொழுது இறைவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கருங்கற்கள் அகழ்வு செய்யும் அளவினைக் கணிப்பதற்கு விஞ்ஞான ரீதியான நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. 2011 ஆம் ஆண்டிற்கான உள்ளகச் சுற்றிக்கையை அடிப்படையாகக் கொண்டு சந்தை ரூபா 1,500 ஆகக் கருதி இறைவரி கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிகழ்காலத்திற்குப் பொருந்தும் வகையில் சந்தை விலையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கருங்கற்கள் அகழ்தல் சம்பந்தமான உத்தரவுப்பத்திர நிபந்தனைகளை மீறி நிலத்துக்கு உள்ளே அகழ்வு செய்தல், அகழ்வின் இறுதியில் நிலத்தை புனரமைப்புச் செய்யாமை, உத்தரவுப்பத்திரம் இல்லாது அகழ்வு செய்தல், சுற்றாடல் புனரமைப்பிற்காக பிணைமுறி அல்லது பிணைப்பணத்தினைப் பெற்றுக்கொள்ளாமை, அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிறுவனங்களிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை, அகழ்வு செய்யப்பட்ட உள்ளபடியான அளவுக்கு இறைவரி அறவீடு செய்யப்படாமை ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தபோதிலும் அதற்காக முயற்சிகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலை. | தற்பொழுது மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் ஆலோசனையைப் பெற்றுக்கொண்டு கருங்கற்களை உள்ளடக்கிய அனைத்து கனிப்பொருட்களும் அகழ்வு செய்யப்பட்டு அகற்றப்படுகின்ற கியூப் அளவினை நிர்ணயிப்பதற்காக தொழில்நுட்ப நடைமுறை தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஏனைய விடயங்களுக்காக பதில் வழங்கப்படவில்லை. | சந்தை விலையை நாளதுவரையாக்குவதற்கு உள்ளபடியான அகழ்தல் அளவுக்கு இறைவரியினை அறவீடு செய்வதற்கு, உத்தரவுப்பத்திர நிபந்தனைகளை மீறுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு மற்றும் சுற்றாடலை புனரமைப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ஊக்குவிப்பு படிகளைச் செலுத்துவதற்காக செயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட நடைமுறை பின்பற்றப்பட்டிருக்காததுடன் கனிப்பொருள் அகழ்வு வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்புபடி செலுத்த வேண்டி இருந்தபோதிலும் ரூபா 12,678,745 தொகையான வெளிக்கள பரிசோதனை வருமாமனத்தையும் ரூபா 5,487,000 தொகையான பரிசோதனை வெடிக்கவைத்தல் (Test Blast) வருமானத்தையும் அடிப்படையாகக் கொண்டு ரூபா 110,166,984 தொகையான ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தன. ஜிஎஸ்எம்பி தொழில்நுட்ப சேவை கம்பனியிடமிருந்து பணியகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட 99 ஊழியர்களுக்கும் ரூபா 9,588,514 தொகையான ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | 2017 ஆம் ஆண்டிற்கான வருமானமாக எடுத்துக்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனை வருமானம் உத்தரவுப் பத்திரத்தை வழங்குவதற்காக மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் அல்லாததுடன் இது கனிப்பொருட்களை அகழ்வதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானமாகும். இதற்கிணங்க பரிசோதனை வெடிக்க வைத்தல் கட்டணமும் கனிப்பொருள் அகழ்வு நடவடிக்கைக்காக மேற்கொள்ளப்படுபவையாகும். | ஊக்குவிப்பு படிகளைச் செலுத்தும் போது அங்கீகரிக்கப்பட்ட வருமானம் மாத்திரம் கவத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டியதுடன் திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டு கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். |

### 3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| கனிப்பொருள் குவியல்களின் கொள்ளளவை அளவீடு செய்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 795,000 தொகைக்கு கொள்வனவு செய்த இலத்திரனியல் தொலைதூர அளவீட்டு உபகரணம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது 02 ஆண்டுகள் காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் | சொத்துக்களை விளைதிறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| பெறுகைத் திட்டத்தில் மூலதனமற்ற பொருட்கள் வழங்கல்களும் சேவைப் பெறுகைகளும் உள்ளடக்கப்பட்டிருகாததுடன் பாதீட்டுக்கு இணங்கும் வகையில் | 2019 ஆம் ஆண்டிலிருந்து பெறுகைத் திட்டத்திற்கு மூலதனமற்ற பொருட்களை வழங்குதல்களும் சேவை பெறுகைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. | அனைத்து பெறுகைகளையும் உள்ளடக்கிய பெறுகைத் திட்டத்தினை விபரமாக தயாரித்து அதற்கிணங்க பெறுகை நடவடிக்கைகளை |

| | | |
|---|---|---|
| பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஹபெறுகைத் திட்டம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் பெறுகைக் கால அட்டவணையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறிய அங்கீகாரமளிக்கப்படாத பெறுகைத் திட்டத்தையும் மிகைத்து 94 கணனிகள் 77 அச்சு இயந்திரங்கள் 48 மணிக்கணனிகள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்கு ரூபா 18,027,184 செலவு செய்யப்பட்டிருந்தது. | பொது மக்களுக்கான சேவைகளை மிகவும் ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்காக 2018 ஆம் ஆண்டில் சேவை அவசியத்திற்காக கணனிகளை கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. சேவை தேவைப்பாடு மற்றும் அலகுக் கிரயத்திற்கு ஒப்பீடாக குறைவடைதலின் அடிப்படையில் அச்சு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட புதிய உத்தியோகத்தர்களுக்காக மற்றும் வெளிக்கள கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் சேவைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு மடிக்கணனி கொள்வனவு செய்யப்பட்டது. | நிறைவேற்ற வேண்டும். |

**3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 25 பதவிகளுக்காக ஒப்பந்த மற்றும் பணி ஒப்படைப்பு அடிப்படையில் 248 ஊழியர்கள் உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் 17 பதவிகள் அங்கீகரித்த பதவியணிக்குரிய பதவிகள் அல்லாதவையாகும். | புவிச்சரிதவியலாளர் புவி பௌதீக விஞ்ஞானி ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்பொழுது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அவசர சேவைத் தேவைப்பாட்டின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டியிருந்தது. | அங்கீகரித்த பதவியணித்திட்டத்தின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி வரை பணியகத்தில் காணப்பட்ட 87 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. புவிச்சரிதவியல் பிரிவில் 8 பதவிகளுக்கு அங்கீகரித்த 11 பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டன. அகழ்தல் பொறியியலாளர் பதவி மற்றும் நில உருவப்பட நிபுனர் பதவிக்காக | நேர்முகப் பரீட்சைகள் நடாத்தி ஆட்சேர்ப்புச் செய்வதற்காக குறிப்பிடத்தக்க அளவு காலம் எடுத்துள்ளது. உள்ளக பதவியுயர்வுகளுக்காக தகமையுள்ள உத்தியோகத்தர்களுக்கு இத்தாமதத்தின் காரணமாக நியாயமின்மை | வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கும் திறைசேரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளவதற்கும் தேவையான தகமைகளைப் பூர்த்தி |

| | | | |
|---|---|---|---|
| | சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள் இருக்கவில்லை. சேர்த்துக்கொள்ளப்பட்ட 11 நிரந்தர ஊழியர்களின் நியமனங்கள் முற்திகதியிடப்பட்டிருந்த போதிலும் அதற்கானு காரணம் அவதானிக்கப்படாததுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னைய திகதி வரை முற்திகதியிடப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வாறே பணியத்தின் அங்கீகரித்த பதவியினர் எண்ணிக்கையை மிகைத்து 2 பதிவாளர் பதவிகளும் 32 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளும் 4 அகழ்வு பொறியியலாளர் பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டிருந்தும் ஒப்பந்த அடிப்படையில் 20 ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தன. | ஏற்பட்டுள்ளது. அதற்கிணங்க இவ்வாறு நேர்முகப் பரீட்சைத் திகதியிலிருந்து அந் நியமனங்களை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு ஏதாவது சலுகைகள் கிடைக்கும் இந் நபர்கள் உள்ளக ரீதியாக சேவையில் ஈடுபட்டுள்ள வர்களாக இருப்பதனால் அவ்வாறு அத் திகதியிலிருந்து நியமனங்கள் வழங்கப்பட்டள்ளதுடன் பணியகத்தின் தொடக்கத்திலிருந்து இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது அந்த முறைமை பின்பற்றப்பட்டுள்ளது. இப் பதவிகளுக்காக பணியகத்தில் தேவைப்பாடு இருந்ததனால் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்டிருந்தது. | செய்துள்ள உத்தியோகத்தர்களை மாத்திரம் சேர்த்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2000 யூலை 19 ஆந் திகதிய 12/2000 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றிக்கையின் பிரகாரம் பயிலுனர்களுக்கு பொறுப்பான கடமைகள் ஒப்படைக்கலாகாது என்ற போதிலும் தலைமை அலுவலகங்களில் அலுவலக கடமைகளுக்கு 149 பயிலுனர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | போதியளவு நிரந்தரப் பதவியணியினர் இல்லாததனால் நிரந்தரமற்ற நபர்களுக்காகவும் ஏதாவது பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டி எற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நிரந்தர பதவியணியினரை மிகையாக சேர்த்துக் கொண்டதன் பின்னர் இந்நிலமை இல்லாமல் போகும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |